**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி – 2022–23 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணாக்கர்களுக்கு, அவர்களின் படிப்புச் செலவிற்கான முழுத் தொகையினையும் வழங்குவதற்கான வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.166 நாள் 26.08.2022

சுபகிருது வருடம், ஆவணி–10

திருவள்ளுவர் ஆண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. 2022–23 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.44915/எச்3/2021, நாள் 16.6.2022.

-----

**ஆணை:**

2022–23 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

> "இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப்பள்ளி மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும்; 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணாக்கர்கள் இந்த உதவியைப் பெறலாம்".

...2

2. தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காண் அறிவிப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் விபரங்களை அளித்துள்ளார்:

அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக, இளநிலை தொழில் முறைப் படிப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்காக அரசுப்பள்ளிகள் சட்டம் எண்.14/2021-ன் கீழ் சட்டம் இயற்றப்பட்டது. அதில், பிரிவு 2(d) மற்றும் 2(g) இல், அரசுப் பள்ளி மாணாக்கர்களாக கருதப்படுபவர்கள் பற்றி கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

2. In this Act, unless the context otherwise requires,-

(d) "**Government Schools**" mean and include Government schools, Corporation schools, Municipal schools, Panchayat Union Schools, AdiDravidar and Tribal Welfare schools, Kallar Reclamation schools, Forest Department schools and other schools managed by Government departments;

** ** ** **

(g) "**Students Studied in Government Schools**" mean children who have studied from Sixth standard to Higher Secondary course in a Government school.

**Explanation** – For the purpose of this definition, children belonging to weaker section and disadvantaged group who have studied upto Eighth standard in a specified category school or an unaided school, as per clause (c) of sub-section (1) of section 12 of the Right of Children to Free and Compulsory Education Act. 2009 and studied all remaining standards upto higher Secondary course in a Government school, shall be deemed to be Students studied in Government schools:

மேலும், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணாக்கர்கள் இந்நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்பதற்கான நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வெளியிடுவதற்கான உரிய, கருத்துருவினை தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. மேலே பத்தி இரண்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை, அரசு நன்கு ஆய்வு செய்து, 2022-23 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணாக்கர்களுக்கு அவர்களின் படிப்புச் செலவிற்கான முழுத் தொகையினையும் வழங்குவதற்காக கீழ்க்காணும் வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளை வகுத்து அரசு ஆணையிடுகிறது:

(i) இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு, இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைப் பெற்ற மாணாக்கர்கள், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை அரசு பள்ளிகளில் பயின்றிருக்க வேண்டும்.

(ii) மேற்படி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைப்பெற்ற மாணாக்கர்கள், அந்நிறுவனங்களில் சேர்வதற்காக கலந்து கொண்ட நுழைவுத்தேர்வில் எடுத்த மதிப்பெண் பட்டியல், சேர்க்கை ஆணை, கல்வி நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்படும் உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) மற்றும் அக்கல்வி நிறுவனங்களில் வசூலிக்கப்படும் அனைத்து கட்டண விவரங்களுடன், அம்மாணாக்கர்களின் சொந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகத்தில் சென்று விண்ணப்பிக்க வேண்டும்.

(iii) மாவட்ட ஆட்சித்தலைவர், விண்ணப்பித்த மாணாக்கர்களின் அனைத்து சான்றிதழ்களையும் சரிபார்த்து, மேற்படி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைபெற்ற மாணாக்கர்களின் படிப்பிற்காக ஆகும் மொத்த செலவின விவரங்களுடன், தொழில்நுட்பக்கல்வி இயக்ககத்திற்கு பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பவேண்டும்.

(iv) மேற்படி, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படும் பரிந்துரையினை ஆராய்ந்து, உயர்கல்விக்காக ஆகும் மொத்த செலவினத்திினை கணக்கீடு செய்து உரிய நிதி ஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கக்கோரி தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அரசுக்கு கருத்துரு அனுப்பவேண்டும்.

(v) அரசுபள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலுவதை ஊக்குவிப்பதற்காக சாதிப் பாகுபாடின்றியும், ஆண்டு வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும், அம்மாணாக்கர்களின் விவரங்கள், மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கருத்துருவினை ஆய்வு செய்து நன்றாக பரிசீலித்து, முதலாம் ஆண்டிலேயே, நான்கு ஆண்டுகளுக்கான செலவினத் தொகைக்கு நிர்வாக ஒப்புதலினை அளித்தும், முதலாம் ஆண்டிற்கான செலவினை ஒப்பளிப்பு செய்தும் அரசால் ஆணை வெளியிடப்படும். அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான கருத்துருவினை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பெற்று தொழில்நுட்ப கல்வி ஆணையரே அம்மாணவருக்கு ஒவ்வொரு ஆண்டுக்குமான செலவினை வழங்கலாம்.

(vi) 7.5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் அரசுப்பள்ளி மாணாக்கர்களுக்கு, அவர்களுக்கான செலவினத்தொகை அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனத்திற்கு மின்னணு சேவை மூலமாக (ECS) ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இந்நேர்விலும், ஒவ்வொரு மாணவருக்கும் அவர் படிப்புச் செலவிற்கான காசோலையினை பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக சம்மந்தபட்ட மாணவருக்கு வழங்குவதற்கு பதிலாக, நேரடியாக சம்மந்தபட்ட மாணவரின் வங்கி கணக்கிற்கு மின்னணு சேவை மூலமாக (ECS) தொழில்நுட்பக் கல்வி ஆணையரால் ஒப்பளிக்கப்பட்ட தொகை வழங்கப்படும்.

(vii) இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்காகவும், சரிபார்த்தலை விரைவாக முடிப்பதற்கும், வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தவும் ஒரு இணைய தளம் (Online Portal) தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் ஏற்படுத்தப்படும்.

4. மேலும், இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்காக அரசு பள்ளி மாணாக்கர்கள் விண்ணப்பிக்கும் பொழுது விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை பெற்று ஆய்வு செய்து பரிந்துரையுடன் கருத்துருவினை தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்:

(i) மாணாக்கர்கள் சேர்ந்த உயர்கல்வி நிறுவனத்தில் வசூலிக்கப்படும் அனைத்து கட்டண உதவித் தொகையினை பெறுவதற்கான சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முகவரியிடப்பட்ட விண்ணப்பம்.

(ii) 6-ஆம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்றதற்கான அப்பள்ளி தலைமை ஆசிரியரால் வழங்கப்படும் சான்றிதழ்.

(iii) தமிழ் நாட்டில் வசிப்பதற்கான இருப்பிடச் சான்றிதழ் (Nativity Certificate)

(iv) உயர்கல்வி நிறுவனத்தில் சேர்வதற்காக கலந்து கொண்ட நுழைவுத் தேர்வில் எடுத்த மதிப்பெண் பட்டியல்.

(v) உயர்கல்வி நிறுவனத்தில் சேர்ந்ததற்கான சேர்க்கை ஆணை.

(vi) சேர்க்கை பெற்ற உயர்கல்வி நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்படும் Bonafide சான்றிதழ்.

(vii) சேர்க்கை பெற்ற உயர்கல்வி நிறுவனத்தில் வசூலிக்கப்படும் அனைத்து கட்டண விவரங்கள்.

5. இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய கருத்துருவினை திருத்திய மதிப்பீடு / பரவலாக்கப்பட்ட பட்ஜெட் (R.E/DCB Meeting) கூட்டத்தின் போது அனுப்பி வைக்குமாறு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.41247/கல்வி-I/2022, நாள் 25.08.2022-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை -25.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துறைகள்,
தலைமைச் செயலகம்,
சென்னை-9

...6

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், சென்னை-9.

நிதித் (கல்வி-I/வசெ-I/வ.செ-II) துறை, சென்னை-9.

இகோ / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பி. [signature] 26.8.2022

பிரிவு அலுவலர்

26/8/22